**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழ்நாடு முழுவதும் கையகப்படுத்தியதில் பயன்படுத்தப்படாத கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதிலே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அம்மா அவர்கள் தலைமையில் நடைபெற்ற துறை ஆய்வுக் கூட்டத்தில் அந்த ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டுமென உத்தரவிட்டிருக்கின்றார்கள். சில தவறுகள், குறிப்பாக வீட்டு வசதி வாரியத்தில் இடமோ, வீடோ வாங்கினால்— தமிழ்நாட்டில் எந்த மாநகராட்சியிலோ, முனிசிபாலிட்டியிலோ, டவுன் பஞ்சாயத்திலோ வீடுகள் இருக்கக்கூடாது. கடந்த ஆட்சியில் அப்படிப்பட்ட தவறுகள் நிறைய நடைபெற்றிருக்கின்றன. அதை ஆய்வு செய்து அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

**புறவழிச் சாலை**

*151—டாக்டர் ச. சுந்தரராஜ்:

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேசிய நெடுஞ்சாலை 49 இல் பரமக்குடிக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2011 ஆகஸ்ட் 10

இந்தியத் திருநாடே வியக்கும் வண்ணம் இமாலய வெற்றி பெற்று மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை: (அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 49, மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிச் சாலை விரிவாக்கம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் ரூபாய் 667 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட கருத்துரு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருவில் பரமக்குடி புறவழிச் சாலையும் இடம்பெற்றுள்ளது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.*

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற நகராட்சிப் பகுதிகளில் வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ளதாலும், போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடவும், சாலை விபத்துகளைத் தவிர்த்திடவும், மக்கள் நலப் பணிகளை விரைவாகச் செய்து முடிக்கின்ற, சிறப்பாக செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ஒரு கால அளவை நிர்ணயித்து விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 49, மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கம், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான நில அளவை, நிலம் எடுப்பு மற்றும்

2011 ஆகஸ்ட் 10]

*மதிப்பீட்டுப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சாலை மதுரை சுற்றுச் சாலையிலிருந்து பரமக்குடி வரையில் சுமார் 80 கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்குவழிச் சாலையாகவும், பரமக்குடியிலிருந்து இராமநாதபுரம் வரையிலான 37 கிலோ மீட்டர் சாலையைப் பலப்படுத்துவதற்காகவும் ஏற்பாடுகள் செயல்படுத்தப்பட உள்ளன. மதுரையிலிருந்து பரமக்குடி வரை 4 வழிச் சாலை அமையும்போது, பரமக்குடி புறவழிச் சாலையும் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, விரைந்து இந்தப் பணியை முடிக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை முதல் இராமேஸ்வரம் வரை மாண்புமிகு அமைச்சர் சொல்லி இருக்கக்கூடிய அந்த தேசிய நெடுஞ்சாலை, முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக இராமேஸ்வரத்திற்குச் செல்ல ஏராளமான வெளி மாநில யாத்திரிகர்கள் அந்தச் சாலையைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போதுள்ள சாலை மிகவும் குறுகலாக இருப்பதன் காரணமாக ஏராளமான விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. பரமக்குடிக்கு ஒரு புறவழிச்சாலை அமைக்க திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல், இராமநாதபுரத்திற்கும் ஒரு புறவழிச்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நடைபெறுகின்றபோது இராமநாதபுரம் புறவழிச் சாலை அமைக்கின்ற பணியும் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

21—

## தடுப்பணை

*848—**திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பேரங்கியூர் கிராமத்தில் தடுப்பணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தெருக்கோடியிலே இருக்கின்ற ஏழையை குபேரனாக்குகின்ற வல்லமை தேவி அலைமகளுக்கு உண்டு; பிறவியிலேயே ஊமையாக உள்ள ஒருவனை கவிஞனாக்குகின்ற வல்லமை தேவி கலைமகளுக்கு உண்டு; கோழையாகப் பிறந்த ஒருவனை வீரனாக்குகின்ற வல்லமை தேவி மலைமகளுக்கு உண்டு. அலைமகள், கலைமகள், மலைமகள் ஆகிய முப்பெரும் தேவியரின் பரிணாம காட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்றவரும், தமிழ், தமிழ் என்று தன்னையும், தன் குடும்பத்தாரையும் வளர்த்துக் கொண்டிருக்கின்ற மைனாரிட்டி தலைவர்கள் மத்தியிலே தமிழக மக்களுக்காக வாழ்ந்து, தமிழர்களுக்காக குரல் கொடுத்துகொண்டு, அதனை செயல்படுத்திக் காட்டிக்கொண்டிருக்கின்ற உன்னதத் தலைவி, அறிவின் உச்சம், அச்சமின்மை, அன்பின் உச்சம், தன்னம்பிக்கை என்பதற்குச் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றவரும், வல்லரசே நேரில் வந்து பாராட்டும் நல்லரசை நடத்திக்கொண்டிருக்கின்ற கழகத்தினுடைய வாழ்நாள் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, எனது விடையினை இந்த மன்றத்தில் கூற விழைகிறேன்.